தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2018 - சித்திரை - 31 14-5-87 இதழ்: 2

நூலகக் கட்டடத் திறப்பு விழா

14.4.'87 தமிழ்ப் புத்தாண்டு நாளில் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகக் கட்டடத்தைத் தமிழ்நாட்டரசு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் திறந்து வைத்தார். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம், உணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.இராமச்சந்திரன், நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம், நூலகக் கட்டடச் செயற் பொறியாளர் திரு எச்.எம். பெல்லி ஆகியோர் முதலமைச்சரோடு உள்ளனர்.

அருங்காட்சியகம், கணிப்பொறி மையம் கட்டடங்கள்

தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகம், கணிப்பொறி மையம் ஆகியவற்றின் கட்டடங்களுக்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் புதிய வளாகத்தில் 14.4.'87-இல் அடிக்கல் நாட்டினார். இவை முறையே உரு.இரண்டு கோடி, உரு. ஐம்பது இலட்சம் திட்டத்தில், முறையே ஓர் இலட்சம் சதுரஅடி, 25000 சதுர அடிப் பரப்புகளில் நன்பொறியியல் கலை நுட்பத்துடன் சிற்பக் கலைப் பொலிவில் கட்டப்படும்.

—தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், தஞ்சாவூர்.

'யுனெஸ்கோ' - நூலகத்திற்கு உதவி

நூலகத் தகவல்களைக் கணிப்பொறியில் பதிவு செய்து வேண்டிய த்கவல்களைத் தேவைக்கேற்பப் பெறுவதற்கு உரிய 'கணிப்பொறி வழியமைப்பை' இந்தியாவில் முதல் முயற்சியாக 1983-இல் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகமும் கணிப்பு மையமும் உருவாக்கின. அப்படிப்பட்ட கணிப்பொறிவழி நூலகத் தகவல் வழியமைப்புகள் எல்லாப் பகுதிகளிலும் உள்ள சிறிய நூலகங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற யுனெஸ்கோவின் முயற்சியால் CDS/ISIS என்ற வழியமைப்பு இந்திய நூலகங்களுக்கு வழங்கப் படுகின்றது. அத்தகைய வழியமைப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு யுனெஸ்கோ, இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை (Indian Dept. of Science and Technology) மூலமாக வழங்கியிருக்கிறது.

—நூலக இயக்குநர்.

முதல்வருக்குப் பொன்னாடை

தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன். தமிழ்ப் பல்கலைக் கழக நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தபோது துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசளிப்பு



தமழப் பல்கலைக் கழகம் வழங்கும் மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசைத் தமிழ்நாட்டரசு முதலமைச்சர் மாண்பு மிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் புகழ் பெற்ற எழுத்தாளரும் 'வேங்கை வனம்' என்னும் நூலின் ஆசிரியருமான திரு கோவி.மணிசேகர னுக்கு 14.4.'87 அன்று வழங்கினார்.

பரிசும் பாராட்டுமாக முதலமைச்சரால் பின்வருபவை வழங்கப்பட்டன.
உரூ.1,00,001/- (உரூ.1001 பொற் கிழி, உரூ.99,000 காசோலை)
பாராட்டுச் சான்றிதழ்
மாமன்னன் இராசராசன் பரிசு எனப் பொறிக்கப்பட்ட பதக்கம்
பொன்னாடை

மாண்புமிகு முதலமைச்சர் பரிசுப் பதக் கத்தை அணிவித்தற்குக் கல்வி, சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி.பொன்னையன் எடுத் துத் தந்தார். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் கண்டு மகிழ்ந்தார்.

அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்க மாநாடு

அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 19-ஆவது கருத்தரங்க மாநாடு திருப்பதி திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் 1987மே2,3 ஆகிய இரு நாள்களில் நிகழ்ந்தது. கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி.பொன்னையன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்த உரையாற்றினார்.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஜி.என்.ரெட்டி விழாவிற்குத் தலைமை ஏற்றார். மன்றத் தலைவர் முனைவர் வ.சு.ப.மாணிக்கம் மன்றத் தின் சார்பில் தலைமையுரை நிகழ்த்தினார்.

மன்றச் செயலாளர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் மன்றத்தின் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பொன் சௌரிராசன் விழாவின் சார்பில் வரவேற்றார். திரு வேங்கடவன் பல்கலைக் கழகத் தாவர இயல் துறைத் தலைவர் நான்கு பகுதிகள் கொண்ட ஆய்வுக் கட்டுரை களை வெளியிட்டார். 300-இற்கும் மேற்பட்ட பேராளர் கள் பங்குகொண்டனர். 100-இற்கும் மேற்பட்டோர் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். பேரா. தேவசங்கீதா நன்றி நவின்றார்.

-அனைத்திந்தியப் பல்கலைக் கழகத்
தமிழாசிரியர் மன்றம்.

நாட்டுப்புற இயல் கருத்தரங்க மாநாடு

தமிழ் நாட்டுப்புறவியல் கழகத்தின் முதலாவது கருத் தரங்க மாநாடு 1987 மே 30,31 ஆகிய இரு நாள் களில் தமிழ்ப் பல்கலைக் கழகப் புதியவளாகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்திய லிங்கம் தலைமையில் நிகழும்.

கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி.பொன்னையன் தொடக்கவுரையாற்றுவார்.

பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஆர்.சுப்பையன் சிறப்புரையாற்றுவார்.

தமிழ்நாட்டரசு தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் முனைவர் ஔவை நடராசன் வாழ்த்தியல் விழாவில் பங்குகொண்டு சிறப்புரையாற்றுவார்.

150 பேராளர்கள் பங்குகொண்டு ஆய்வுக் கட்டுரை படிப்பார்கள்.

-சமூகவியல் துறை.

இலக்கியக் கருத்தரங்கு

அகில இந்திய தமிழ் இலக்கியக்கழகக் கருத்தரங்கம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தில் 1987 ஜுன் 6, 7 ஆகிய இரு நாள்களில் நிகழும்.

-செயலாளர்.
அகில இந்திய தமிழ் இலக்கியக் கழகம்.

சாலணி

தமிழ்நாட்டில் கொங்குப் பகுதி கிராமங்களில் பல வீடுகளில் காணப்படுவது 'சாலணி'. அழகிய வேலைப்பாடுகளுடன் மரத்தில் செய்யப்பட்ட இப்பொருள் 'சாலணி, சாலணி மரம், சாலாணி மரம்' என்று பலவாறு அழைக்கப்படுகின்றது.

பொதுவாக, 'சாலணி' தண்ணீர்க் குடம் வைக்கப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, 'சாலணி' திருமணத்தின் போது மணமகளுக்குச் சீர்தனமாக அளிப்பதற்குப் பயன்படுகிறது. மேலும் பருவமடைந்தவுடன் பெண்களுக்குப் புத்தாடை எடுத்து அதை ஒரு தட்டில் வைத்துச் சாலணியின் மீது சிறிது நேரம் வைத்திருந்து பிறகு உடுத்துவதற்கு அளித்தனர். இப்பழக்கம் ஏறக்குறைய இப்பொழுது மறைந்துவிட்டது என்றே கூறலாம். அழகிய வேலைப்பாடுடைய 'சாலணி' ஒன்று பெரியார் மாவட்டக் களப்பணியின் போது சேகரிக்கப்பட்டு இப்பொழுது தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

–கு. தேவராஜ், அருங்காட்சியகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் திங்கள் வெளியீடான செய்திமலரைத் தமிழ் நாட்டரசு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் படித்து மகிழ்கிறார்.

'தி.க. சண்முகம் நாடகங்கள்' வெளியீடு

தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறையில் பணியாற்றும் முனைவர் க. இரவீந்திரன் முனைவர் ஆய்வுப் பட்டத்திற்கு உருவாக்கிய 'தி.க. சண்முகம் நாடகங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா சென்னையில் 26.4.'87–இல் அவ்வை சண்முகம் 75–ஆவது பிறந்த நாள் விழாவின் போது நடைபெற்றது. நூலை டாக்டர் ம.பொ. சிவஞானம் வெளியிட்டார். நடிகர் கமலஹாசன் நூலின் முதல்படியைப் பெற்றுச் சிறப்புரையாற்றினார். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், பேரா. அ. ச. ஞானசம்பந்தனார் திரு ஜி. சுப்பிரமணியம், திரு நாகேஷ், திரு எஸ். வி. சகஸ்ரநாமம் மற்றும் பலர் உரையாற்றினர்.

சமையலறையின் அமைப்பு

சமையற்கலை குறித்த பாகசாத்திரம் என்ற பழைய நூல் (கி.பி.1867) சமையலறையின் அமைப்பு மனையின் அக்கினி மூலையில் 32 அடி நீளம் 8 அடி அகலம் என 4:1 என்ற அளவில் புகைக் கூண்டுக் கூரையுடன் அமைக்கப்பட வேண்டும் என்கிறது.

அவ்வறையின் இந்திர திசையில் (கிழக்கு) அடுப்பு அமைதல் நன்று. பசுவின் வால் போன்ற தோற்றத்தில் செங்கல் அல்லது களிமண்ணால் ஒன்பது முகடுகளுடன் அடுப்பு அமைதல் வேண்டும்.

–கோ. தெய்வநாயகம், கட்டடக் கலைத்துறை.

உலகின் முதல் நூலகம்

'மிகப் பழங்காலத்தில் முதன் முதல் எழுந்த நூல்நிலையம் பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட களிமண் தட்டுக்கள் (Clay Tablets) ஆகும். இவையே பாபிலோனிய நாகரிக மக்களின் நூல்கள். இவற்றின் காலம் சுமார் கி.மு.2000'

–கலைக்களஞ்சியம்: தொகுதி 6: பக்.566.

இதுபோல்,

இந்தியாவில் சாம்பா மாவட்டத்துச் சிற்றூர் வயலில் அறிஞர் இராகுல சாங்கிருத்தியாயன் அகழாய்வை மேற்கொண்டு செங்கற் பாளங்களைக் கண்டெடுத்தார். $1\frac{1}{2}$ அடி நீளம் $1\frac{1}{2}$ அடி அகலம் 1 அங்குலம் தடிமனில் வார்க்கப்பட்ட பச்சைக் களிமண் பாளங்களில் பிராமி எழுத்துக்கள் கீறப்பட்டுச் சுடப்பட்ட பாளங்கள் இவை. ஒவ்வொரு பாளத்தின் ஒவ்வொரு பக்கமும் ஒரு நூலின் ஒவ்வொரு பக்கமாகும். இந்நூலின் ஆசிரியர் வைசாலி நாட்டுத் தளபதியாகிய சிம்ம சேனாபதி. இவற்றின் காலம் கி.பி.3–ஆம் நூற்றாண்டு.

இவ்வாறான 1600 செங்கற் பாளங்களும் இன்றும் பாட்னா அருங்காட்சியகத்தில் உள்ளன.

–கோவை. இளஞ்சேரன்.

கோபால கிருஷ்ண பாரதியார் பஞ்சரத்ன கீர்த்தனை

சத்குரு தியாகராச சுவாமிகள் கன இராகங்களான நாட்டை, கௌள, ஆரபி, வராளி, ஸ்ரீ ஆகிய ஐந்து இராகங்களில் இயற்றிய பஞ்சரத்ன கீர்த்தனைகளைத் திருவையாற்றில் அண்மையில் நடைபெற்ற தியாகராச ஆராதனை விழாவில் முன்னணி இசைக்கலைஞர்கள் பாடக் கேட்டு மகிழ்ந்தோம்.

தியாகராசரின் சமகாலத்தவரான கோபால கிருஷ்ண பாரதியாரும் மேற்கூறிய ஐந்து கன இராகங்களில் தமிழில் மிக அருமையான கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய 'பஞ்சரத்ன கீர்த்தனை'களையும் முன்னணி இசைக்கலைஞர்கள் பாடி, அதன்மூலம் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் பெருமைப்படுத்தலாம்.

–பி. எஸ். லோச்சன்,
இசைத்துறை.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 005.
தமிழ்நாடு - இந்தியா

இ.அ.அ. மட்டும்

) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

நூல்கள் வெளியீடு

தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்பித்த 'வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-4', 'பாரதி பாடல்கள் -ஆய்வுப் பதிப்பு' ஆகிய இரு நூல்களையும் தமிழ் நாட்டரசு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் நூலகக் கட்டடத் திறப்பு விழாவின் போது வெளியிட்டார். தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் நூல்களின் முதற்படிகளைப் பெற்றுக்கொண்டார்.

பதிப்பில் - பாரதி கட்டுரைகள்

பாரதி பாடல்கள் தொகுப்பைத் தொடர்ந்து 'பாரதி கட்டுரைகள்' பதிப்பாக உள்ளது.

பாரதி, பல்வகை இதழ்களிலும் எழுதிய கட்டுரைகளும் பலருக்கு எழுதிய கடிதங்களும் கொண்டு தக்க குறிப்புகளோடு இத்தொகுப்பு அமையும். பின் இணைப்புகள் பல அரிய குறிப்புகளை உள்ளடக்கியனவாக அமையும்.

பாரதியின் உரைநடை வளத்தையும் கருத்து ஆழ உணர்வையும் கொண்ட இப்பதிப்பு ஆர்வலர்க்கும் ஆய்வாளர்க்கும் மிகப் பயன் தரும் பதிப்பாகும்.

வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-4

(இராசர்சு கார்ல் முதல் உரிச்சொல் நிகண்டு வரை)

மாமன்னன் இராசராசன் பற்றிய வரலாற்றுச் செய்திகள், பெரியார் ஈ.வே.இராமசாமி, நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை, இலால் பகதூர் சாத்திரி, இலட்சுமிபாய், சான்சிராணி முதலிய சான்றோர் களது வாழ்வியற் கட்டுரைகள் உள்ளன. இலங்கை, இலண்டன், ஈராக் முதலிய நகரங்களின் வரலாறுகள் உள்ளன. இலவசச் சட்ட உதவி, இளங் குழந்தை இறப்பு, இராகுட் அணை, உடைகள், உயிரினங்களின் தோற்றம் முதலிய பலதுறைக் கட்டுரைகள் கருத்துக் கருவூலங்களாக நிறைந்துள்ள அரிய தொகுப்பு.

200 அறிஞர்களது 700 கட்டுரைகள் 1000பக்கங்களில் நிறைந்துள்ளன.

நூல் அளவு திம்மி 1/4 விலை உரு.300/-

பாரதி பாடல்கள் 'ஆய்வுப் பதிப்பு'



பாரதி பாடல்கள் அனைத்தும் நிறைந்த முழுமை நூல். பாரதி எழுதிய கால அடுக்கில் பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்புரைகள், பாட வேறுபாடு, உரிய தலைப்புகள், பொருள் அகர நிரல், பல்வகைக் குறிப்புப் பின்னிணைப்புகள் கொண்ட நிறைவு நூல்.

பாரதியார் வாழ்வியல்நோக்கு, கவிதைப் போக்கு, பாட்டுத்திறன் முதலியவற்றை ஆய்வதற்கு ஏற்ற அமைப்புடைய புதிய பதிப்பு.

பக்.1300: அளவு திம்மி1/8; விலை உரு.150/-

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.